செய்தி வெளியீடு எண்: 494 நாள்: 19.8.2009

# பத்திரிக்கை செய்தி

அனைவருக்கும் கல்வி திட்டத்தைச் சார்ந்த வட்டார மற்றும் குறுவளமையங்களில் காலியாக உள்ள ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட அனைத்து பாடங்களுக்கான **351** தேர்வாளர்களுக்கு நியமன ஆணை வழங்குவது சார்பாக **25.8.2009** அன்று காலை **9.00** **மணியளவில் சென்னை 4,** மைலாப்பூர் சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள புனித ரபேல்ஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் (St.Raphels Girls Higher Secondary School) கலந்தாய்வு நடைபெற உள்ளது.

கலந்தாய்விற்கு வருகை தரும் தேர்வாளர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு அசல் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து பெறப்பட்ட தெரிவுக்கடிதத்தினை தவறாமல் கொண்டு வருதல் வேண்டும்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9